செய்தி வெளியீடு எண்: 064 நாள்: 24.01.2018

<u>செய்தி வெளியீடு</u>

சுதந்திர போராட்ட வீரர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் பிறந்தநாள் விழுப்புரத்தில் அரசு விழாவாக கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் உத்தரவுப்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த பெருந்தலைவர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுத் தம் வாழ்வையே அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றுத் தியாகங்கள் பல புரிந்து, தமது இன்னுயிர் நீத்தத் தியாகச் செம்மல்கள், ஆகியோரது பிறந்தநாள் விழாவினை அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில், திண்டிவனம் அருகே உள்ள ஓமந்தூர் கிராமத்தில் திரு. ராமசாமி ரெட்டியார் அவர்கள் பிறந்தார். சட்டம் பயின்ற இவர் இளம் வயதிலேயே சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் 1947–ல் சென்னை மாகாணத்தின் முதல்வராக பதவி ஏற்று 1949 வரை பதவி வகித்தார். விவசாயிகள் மற்றும் ஏழை, எளியோர் முன்னேற்றத்திற்காக சிந்தித்து, உழைப்பு, நேர்மை, கண்டிப்பு, கட்டுப்பாடு, விவசாயத்தில் ஆர்வம், சிக்கனம், சுயதேவை பூர்த்தி, சன்மார்க்கம், நீதி தவறாமை ஆகிய குறிக்கோளுடன் சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என கருதியவர்.

இவரது ஆட்சிக்காலத்தில், சென்னை கோயில் நுழைவு அதிகாரச் சட்டம் 1947ல் இயற்றப்பட்டது. இதன்படி, தாழ்த்தப்பட்டோர் கோயிலுக்குள் செல்வதற்கான முழு உரிமை பெற்றனர். மேலும், ஜமீன் இனாம்தார் இவரது ஆட்சிக்காலத்தில் ஒழிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் நினைவை போற்றிடும் வகையில் அன்னார் அவர்களுக்கு விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாலுக்கா, ஓமந்தூர் கிராமத்தில் ரூபாய் 69 லட்சம் மதிப்பீட்டில் நினைவு மண்டபம் கட்டப்பட்டு 20.02.2013 அன்று புரட்சித்தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அந்த வகையில், சுதந்திர போராட்ட வீரரும், சென்னை மாகாணத்தின் முதல் முதல்வருமான **திரு.ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்** அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 1–ஆம் தேதி அன்று விழுப்புரம் மாவட்டத்தில் அரசு விழாவாக கொண்டாட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பிப்பார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**